# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075849

C

1. District : கடலூர் மாவட்டம் PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் Year: 2022 ஆண்டு FIR No.: 01/2022 மு.த.அ. எண் Date: 07.03.2022 நாள்

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனை சட்டம் Sections பிரிவுகள்: 409, 109

(ii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 19.08.2014 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.03.2022 Time : நேரம் 17.00 hours

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I Time : நேரம் 17.00 hours

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 37 கி.மீ. தென்மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், வடலூர்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சு. திருவேங்கடம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கு.சுந்தரபாண்டியன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 48 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர், (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) கோ.ஜெகன், த/பெ.கோதண்டம், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர், வடக்குத்து ஊராட்சி,
2) காந்தி கனிமொழி, க/பெ. விநாயகமுருகன், முன்னாள் சார் பதிவாளர், வடலூர்
3) ஜெ.செந்தில்குமார், த/பெ. ஜெனகன், நெ.13, மேட்டுத் தெரு, நாமக்கல் நகர் & மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) . —

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று 07.03.2022 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, தபால் மூலம் கிடைக்கப்பெற்ற ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்ககம், சென்னை உத்திரவின்படி பதிவுசெய்த வழக்கின் விவரம் பின்வருமாறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, கடலூர் மூலம் அனுப்பப்பட்ட விழிப்பு அறிக்கையில் "கடலூர் பதிவு மாவட்டம், வடலூர் சார் பதிவாளர் திருமதி. காந்தி கனிமொழி என்பவர் கடந்த 14.08.2014ம் தேதி வடகுத்து கிராம ஊராட்சி எல்லையில் புதிய சர்வே எண்கள்.190/1, 190/3எ–ல் பொது உபயோகத்திற்கு என அரசுக்கு சட்ட விதிகளின்படி தானம் அளிக்கப்பட்ட ரூ.14,10,46,348/– மதிப்புள்ள 21,833.80 சதுர மீட்டர் அளவுள்ள அரசுக்கு

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு ~~எடுத்துக்கொள்ளப்பட்டது~~ / பணிக்கப்படுத்தல் S. [illegible] .................... பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[illegible] 07/03/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

சி. திருவேங்கடம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம்

07-03-2022 at 18.00 hrs.

Name: பெயர் ....................
Rank: நிலை .................... No எண் ........
உ.ஊ.த.க பிரிவு, கடலூர்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

சொந்தமான இடத்தினை சட்டத்திற்கு புறம்பாக தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, தான ஆவணத்தை, ரத்து செய்ய உரிமையற்றவர்கள் மூலம் எழுதிக் கொடுக்கப்பட்ட தான ரத்து ஆவணத்தை, வடலூர் சார்பதிவு ஆவண எண்.2117/2014 நாள் 19.08.2014ம் தேதியில் பதிவு செய்துள்ளார். இதன் மூலம் ரூ.14,10,46,348/– அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்." என தெரிகிறது. எதிரி–1) திரு.கோ.ஜெகன், த/பெ. கோதண்டம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், வடகுத்து ஊராட்சி, குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் மற்றும் எதிரி–2) திருமதி. காந்தி கனிமொழி, க/பெ. விநாயகமுருகன், முன்னாள் சார்பதிவாளர், வடலூர் (தற்போது சார்பதிவாளர், ஜாயின்ட்–1, சார்பதிவாளர் அலுவலகம், கடலூர்) ஆகிய இருவரும் சட்டப்பிரிவு 2(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988ன்படி இவ்வழக்கு சம்பவ நிகழ்வின்போது பொது ஊழியர்கள் ஆவார்கள். எதிரி–3) திரு.ஜெ.செந்தில்குமார், த/பெ. ஜெனகன், எண்.13, மேட்டுத்தெரு, நாமக்கல் நகர், நாமக்கல் மாவட்டம் என்பவர் தனி நபர் ஆவார். கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் வடகுத்து கிராம ஊராட்சி அமைந்துள்ளது. மேற்படி வடகுத்து கிராமத்திற்கான பத்திரப்பதிவின் அதிகார எல்லை வடலூர் சார் பதிவாளர் அலுவலகம் ஆகும். கடந்த 2000–ம் ஆண்டு திரு.ஜெ.செந்தில்குமார், த/பெ. ஜெனகன், நெ.13, மேட்டுத் தெரு, நாமக்கல் நகர், நாமக்கல் மாவட்டம் என்பவர் வடகுத்து கிராம ஊராட்சி எல்லையில் புதிய சர்வே எண்கள். 190/1, 190/3எ –ல் சம்மந்தப்பட்ட நிலத்தில் அரசு அங்கீகாரம் பெற்று மனைப் பிரிவுகளாக பிரித்து என்.ஜே.வி. நகர் என பெயரிட்டு ரியல் எஸ்டேட் பிசினஸ் செய்துள்ளார். மேற்படி என்.ஜே.வி. நகரின் பொதுப் போக்குவரத்துக்காக ரோடு அமைக்க ஒதுக்கப்பட்ட இடம் மற்றும் மனமகிழ் மன்றம், பூங்கா, நூலகம் அமைப்பது போன்று பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட 21,833.80 சதுர மீட்டர் இடத்தினை, திரு.ஜெ.செந்தில்குமார் என்பவர் 28.01.2000ம் தேதி அரசு வகுத்துள்ள விதிமுறைகளின்படி, வடகுத்து கிராம ஊராட்சி நிர்வாகத்திற்கு அன்பளிப்பாக தான ஆவணம் (Gift deed) மூலம் பத்திரப்பதிவு செய்து சொத்து பரிமாற்றம் செய்துள்ளார். இந்த அன்பளிப்பு பத்திரப்பதிவானது வடலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.139/2000, நாள் 28.01.2000–ம் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்று முதல் 21,833.80 சதுர மீட்டர் இடம் வடகுத்து கிராம ஊராட்சிக்கு சொந்தமானதாகவும், அரசாங்க சொத்தாகவும் மாற்றம் செய்யப்பட்டது.

அ. [signature] 07/03/2022.
அ. தேவேந்திரன்,
காவல் ஆய்வாளர், ஊ.த.க. கடலூர்

மேற்கண்ட அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை வேறு நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ, மாற்றம் செய்யவோ கிராம ஊராட்சிகளுக்கு உரிமை இல்லை என கீழ்கண்ட அரசாணைகளில் கூறப்பட்டுள்ளது. **1)**"The Tamilnadu Panchayat (Acquisition and Transfer of Immovable property) Rules, 2000, (G.O (Ms) No.209, Rural Development (C-4) Department, dated 17.08.2000). Mentioned in Rule No.5. Transfer otherwise than by lease of immovable property belonging to a village panchayat or panchayat union council. 1. A panchayat shall not, without the previous sanction of the Inspector (i.e. District Collector), make or sanction any transfer, except by way of lease, of any immovable property belonging to it, or create or sanction the creation of any charge upon any such property. If the value of the property to be transferred or the amount for which the charge to be created exceeds fifty thousand rupees, the previous sanction of the Government shall also be obtained for such transaction." **2)** "Directorate of Rural Development and Panchayat Raj, Chennai D.O. Lr. No.75342/2012/PRI 3-1, dated : 29.09.2012, referred The Tamilnadu Panchayat (Acquisition and Transfer of Immovable property) Rules, 2000, vide (G.O (Ms) No.209, Rural Development (C-4) Department, dated 17.08.2000) and stated in para No.3 that the Inspector of Panchayat (i.e. District Collector) can accord permission for the transfer of immovable property belonging to the Rural Local Bodies not exceeding the value of Rs.50,000/-. If the value of the land exceeds Rs.50,000/-, prior sanction should be obtained from the Government." **3)** "The Tamilnadu Panchayats (Regulation of the use of Communal Lands by Panchayats in Estates) Rules 1999 (G.O. (Ms) No.273, Rural Development (C-4), dated 28th December 1999) stated in Rule No,4. Restriction of Village Panchayat to use of communal lands. – In exercise of the power under clause (a) of sub-section (1) of Section 135 of the Act, in respect of any land, the Village Panchayat shall not do any act which would affect the reversionary right." அதுபோன்று, அரசு /உள்ளாட்சி நிறுவனங்களுக்கு உரிமையான சொத்தை பொறுத்தவரை சொத்தின் உரிமையாளரால் பதிவுக்கு எழுதி தாக்கல் செய்யப்பட்ட

அ. [signature] 07/03/2022
அ. திருவேங்கடம்,
காவல் ஆய்வாளர் ஊ.த.க. கடலூர்

நன்கொடை, செட்டில்மெண்ட் போன்ற ஆவணங்களை ரத்து செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களின் பதிவின் போது சார் பதிவாளர்கள் கடைபிடிக்கவேண்டிய நெறிமுறைகள் பற்றி கீழ்கண்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். 12650/சி1/2013, நாள் 27.04.2013–ல், “அரசு/உள்ளாட்சி நிறுவனங்களுக்கு சொத்தின் உரிமையாளரால் எழுதி பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்ட நன்கொடை, செட்டில்மெண்ட் போன்ற ஆவணங்களை பொருத்து தன்னிச்சையாக எழுதி கொடுத்தவரால் (Donor/settler–ஆல்) மட்டும் ரத்து செய்து பதிவிற்கு தாக்கல் செய்யப்படுமாயின் அந்த ஆவணத்தினை பதிவிற்கு அனுமதிக்கக்கூடாது” என தெரிவித்து தமிழகத்திலுள்ள அனைத்து சார் பதிவாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். இந்த சுற்றறிக்கை சொத்து பரிமாற்ற சட்டத்தை தழுவி அனுப்பிய சுற்றறிக்கை. எனவே, அரசாங்கம் மட்டுமே இந்த சொத்து குறித்து பரிமாற்றம் செய்ய உரிமை பெற்றதாகும். மேற்படி சட்ட விதிகளுக்கு முரணாக வடக்குத்து ஊராட்சியின் அப்போதைய தலைவர் திரு.கோ.ஜெகன் என்பவர் 19.05.2014ம் தேதி வடக்குத்து ஊராட்சியில் சட்டவிரோதமாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளார். அந்த தீர்மானத்தில் வடக்குத்து கிராம சர்வே எண்கள் 190/1, 190/3 அதன் உட்பிரிவுகளில் சம்மந்தப்பட்ட இடங்களில் அமைந்துள்ள என்.ஜே.வி. நகர், வேலுடையான் நகர் ஆகியவற்றில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது இடங்கள் என காண்பிக்கப்பட்டுள்ள இடங்கள் ஊராட்சிக்கு தேவைப்படவில்லை என முடிவு செய்யப்பட்டதாகவும், அதன்படி வடலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.139/2000, நாள் 28.01.2000 மூலம் வடக்குத்து ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட 21,833.80 சதுர மீட்டர் இடத்தினை வடக்குத்து ஊராட்சிக்கு தானமாக கொடுத்தவருக்கே திரும்ப ஒப்படைக்கும் நோக்கத்துடன் வடலூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 139/2000 என்ற தான பத்திரத்தினை ரத்து செய்வதாக குறிப்பிட்டுள்ளார். அதனை தொடர்ந்து 1) திரு.ஜெ.செந்தில்குமார், த/பெ. ஜெனகன், நெ.13, மேட்டுத் தெரு, நாமக்கல் நகர், நாமக்கல் மாவட்டம், 2) கோ.ஜெகன், த/பெ. கோதண்டம், ஊராட்சி மன்ற தலைவர், வடக்குத்து ஊராட்சி, குறிஞ்சிப்பாடி தாலுக்கா ஆகிய இருவரும் 2014ம் ஆண்டு வடலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தான ரத்து பத்திரம் ஒன்றினை தாக்கல் செய்துள்ளனர். அதில் 2000 ஆம் ஆண்டு

ஒ/- 07/03/2022
அ.திருவேங்கடம்,
காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு கடலூர்

வடலூர் சார் பதிவக ஆவண எண்.139/2000, நாள் 28.01.2000ன் மூலம் 21,833.80 சதுர மீட்டர் இடம் ஒப்படைப்பட்டதாகவும், அந்த இடம் ஊராட்சிக்கு தேவைப்படாததால், சம்மந்தப்பட்ட தான பத்திரத்தினை ரத்து செய்யுமாறு பத்திரம் தாக்கல் செய்துள்ளனர். அதனை ஏற்றுக்கொண்ட அப்போதைய வடலூர் சார் பதிவாளர் திருமதி.காந்தி கனிமாழி சட்டவிரோதமான முறையில் தான ரத்து பத்திரத்தினை பதிவு செய்துள்ளார். அந்த ஆவணமானது வடலூர் சார் பதிவகத்தில் ஆவண எண்.2117/2014 நாள் 19.08.2014 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ரத்து ஆவணம் மூலம் அரசுக்கு சொந்தமான 21,833.80 சதுர மீட்டர் இடம் மீண்டும் தானம் எழுதி கொடுத்தவருக்கே உரிமையானதாக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கான அரசு வழிகாட்டுதுதல் மதிப்பு 1 சதுர மீட்டர் ரூ.6460/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அந்த வழிகாட்டி மதிப்பின்படி ரூ.14,10,46,348/– மதிப்புள்ள 21,833.80 சதுர மீட்டர் அரசுக்கு சொந்தமான இடம் சட்டவிரோதமாக தனியாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வடக்குத்து ஊராட்சியின் அப்போதைய தலைவர் திரு.கோ.ஜெகன், அரசுக்கு 28.01.2000ம் தேதி ஒப்படைக்கப்பட்ட ரூ.14,10,46,348/– மதிப்புள்ள 21,833.80 சதுர மீட்டர் இடத்தினை சட்டவிரோதமாக, அரசு வகுத்துள்ள விதிகளுக்கு முரணாக தனிநபருக்கு ஒப்படைத்துள்ளார். மேற்படி திரு.ஜெ.செந்தில்குமார் என்பவர் அரசுக்கு அநியாய நட்டம் ஏற்படும் என தெரிந்தே அப்போதைய வடக்குத்து ஊராட்சிமன்ற தலைவர் திரு.கோ.ஜெகன் என்பருடன் கூட்டு சதி செய்து, அரசுக்கு சொந்தமான 21,833.80 சதுர மீட்டர் இடத்தினை தனி நபருக்கு ஒப்படைத்ததன் மூலம் அரசுக்கு ரூ.14,10,46,348/– இழப்பு ஏற்படுத்தியுள்ளார். மேற்படி அப்போதைய வடலூர் சார்பதிவாளர் திருமதி.காந்தி கனிமொழி அவர்கள் அப்போதைய வடக்குத்து ஊராட்சிமன்ற தலைவர் திரு.கோ.ஜெகன் மற்றும் திரு.ஜெ.செந்தில்குமார் ஆகியோர்களுக்கு உடந்தையாக செயல்பட்டு சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வடலூர் சார்பதிவக ஆவண எண் 2117/2014 நாள் 19.08.2014 (தான ரத்து ஆவணம்) பதிவு செய்ததின் மூலம் அரசுக்கு சொந்தமான ரூ.14,10,46,348/– மதிப்புள்ள 21,833.80 சதுர மீட்டர் இடத்தினை தனி நபருக்கு ஒப்படைத்துள்ளார். எனவே, மேற்கூறிய கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் விழிப்பு அறிக்கையின்படி எதிரிகள் கீழ்கண்டவாறு பிடிக்கக்கூடிய குற்றங்கள் புரிந்திருக்கக்கூடும் என்று வலுவாக சந்தேகப்படுவதற்கு

07/03/2022

அடிப்படை ஆதாரங்கள் காணப்படுகின்றது. எனவே, எதிரி–1 திரு.கோ.ஜெகன், த/பெ.கோதண்டம், முன்னாள் கிராம ஊராட்சிமன்ற தலைவர், வடகுத்து கிராம ஊராட்சி என்பவர் மீது பிரிவு 409 இந்திய தண்டனை சட்டம் மற்றும் பிரிவு 13(2) r/w 13(1)(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 ஆகிய சட்டப் பிரிவுகளின் படியும், எதிரி–2 திருமதி. காந்தி கனிமொழி, க/பெ. விநாயகமுருகன், முன்னாள் சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், வடலூர், (தற்போது சார் பதிவாளர், ஜாயிண்ட்–1 சார் பதிவாளர் அலுவலகம், கடலூர்) என்பவர் மீது பிரிவு 409 இந்திய தண்டனை சட்டம் உ/இ 109 இந்திய தண்டனை சட்டம் மற்றும் பிரிவு 13(2) r/w 13(1)(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 உ/இ 109 இந்திய தண்டனை சட்டம் ஆகிய சட்டப் பிரிவுகளின் படியும், எதிரி–3 திரு.ஜெ.செந்தில்குமார், த/பெ. ஜெனகன், நெ.13, மேட்டுத் தெரு, நாமக்கல் நகர், நாமக்கல் மாவட்டம் (தனி நபர்) என்பவர் பிரிவு 409 இந்திய தண்டனை சட்டம் உ/இ 109 இந்திய தண்டனை சட்டம் மற்றும் பிரிவு 13(2) r/w 13(1)(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 உ/இ 109 இந்திய தண்டனை சட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளின் படியும், குற்றம் புரிந்திருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு அடிப்படை ஆதாரங்கள் காணப்படுகிறது. எனவே, எதிரி–1–க்கு எதிராக பிரிவுகள் 409 இந்திய தண்டனை சட்டம் மற்றும் 13(2) r/w 13(1)(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988ன் படியும், எதிரி–2, எதிரி–3 ஆகியோர்களுக்கு எதிராக பிரிவுகள் 409 இந்திய தண்டனை சட்டம் உ/இ 109 இந்திய தண்டனை சட்டம் மற்றும் 13(2) r/w 13(1)(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 உ/இ 109 இந்திய தண்டனை சட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளின் படியும் குற்ற அலுவலர்கள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் மீது பதிவுறு வழக்கு பதிய உரிய துறை அலுவலர்களிடமிருந்து திருத்தியமைக்கப்பட்ட ஊழல் தடுப்பு சட்டம் 2018ன் பிரிவு 17(A) ன்படி முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இன்று 07.03.2022 ஆம் தேதி 17.00 மணிக்கு, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண். 01/2022 சட்டப்பிரிவுகள் 409 இந்திய தண்டனை சட்டம் மற்றும் 13(2) r/w 13(1)(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 மற்றும் 409 இந்திய தண்டனை சட்டம் உ/இ 109 இந்திய தண்டனை சட்டம் மற்றும் 13(2) r/w 13(1)(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988, உ/இ 109 இந்திய தண்டனை சட்டம் ஆகிய சட்டப் பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலை Honourable Chief Judicial Magistrate

07/03/2022

cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன். மேலும், உத்திரவுபடி வழக்கின் மேல்விசாரணை கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.S.மாலா அவர்கள் வசம் ஒப்படைக்கப்படுகிறது.

அ. [signature]
07/03/2022
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு கடலூர்.